**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 258 /2017**

**Deposition of P.W.** 14

Name : திரு. ஜோசப் சிறில்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 16.07.2025**

Accused Present.

**முதல் விசாரணை–**

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி தற்போது கரூரில் வசித்து வருகிறேன். கடந்த 2012ம் வருடம் தக்கலை வட்ட ஆய்வாளராக பணியாற்றிய போது தக்கலை காவல்நிலைய குற்ற எண்.972/2012 பிரிவுகள் 294(பி, 342, 307, 397 இ.த.ச வழக்கை எனக்கு முந்தைய காவல் ஆய்வாளர் திரு. பரமசிவம் அவர்கள் விசாரித்து என்னிடம் ஒப்படைத்ததை நான் 04.02.2013ம் தேதி எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு ஏற்கனவே முதல் விசாரணை அதிகாரி விசாரணை செய்த சாட்சிகளை விசாரணை செய்ததில் அவரிடம் சொன்னது போலவே சாட்சிகள் என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் முதலாவது எதிரி ஆல்பர்ட், 3வது எதிரி முருகன் ஆகியவர்களை முதல் விசாரணை அதிகாரி கைது செய்து

.2.

நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 2வது எதிரி ராஜேஷ் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு படி முன் ஜாமீன் பெற்றுள்ளார். 10.03.2013ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட புகார்தாரர் விஜி என்பவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்து சான்று தந்த மருத்துவர் திரு. மகிலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் விசாரணை முடித்து அரசு வழக்கறிஞரின் கருத்துரை பெற்று எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சரியாக விசாரணை செய்யாமல் பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் மருத்துவரை 10.03.2013ம் தேதி விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன். சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ஸ்டீபன் என்பவரை நான் விசாரிக்கவில்லை. 2வது எதிரி மீது நான் தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.